# ஹபராதுவ பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹபராதுவ பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கும் குழுவின் சிபார்சின் அடிப்படையில் ஹபராதுவ பிரதேச சபையினால் இமதுவ பிரதேச சபைக்கு கையளிக்கப்பட வேண்டியதாகத் தீர்மானிக்கப்பட்ட ரூபா 15,867,478 தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 2,051,705 தொகையான பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 யூலை 23 ஆந் திகதி வரையிலும் உரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சட்டரீதியாக இமதுவ பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,790,300 தொகையான 04 வேலைகளுக்காக நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய மூலதன உதவியாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் ரூபா 1,790,300

இனால் மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய பதிவாளர் நாயகத் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 28,941,214 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,000,000 தொகையாகக் காண்பிக்கப்பட்டமையினால் திரண்ட நிதியம் ரூபா 13,941,214 இனால் குறைவாகவும் மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 34,724,401 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 20,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 14,724,401 தொகையினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய உள்ளுராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 5,611,851 தொகையான பங்களிப்புப் பணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காக வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 96,840 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது இலங்கை ஆயுர் வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 140,000 பெறுமதியான மருந்து இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 93,115,831 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) தரைமாடியில் 01, 03 மற்றும் 09 ஆம் இலக்க கடைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,692 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் புதிய சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 21 ஆந் திகதி வரை சபையின் எந்த உறுப்பினரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்றை வழங்கியிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையாற்றுகின்ற 08 ஊழியர்களிடமிருந்து ரூபா 26,850 தொகையான கடன் மீதியின் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,100 தொகை 2010 ஆம் ஆண்டிலிருந்தும் ரூபா 9,750 தொகை 2011 ஆம் ஆண்டிலிருந்தும் செலுத்தப்படாது நிலுவையாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான நூலகங்களில் காணப்பட்ட ரூபா 105,025 பெறுமதியான 580 புத்தகங்கள் காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பாக பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து புத்தகங்களின் பெறுமதியினை அறவீடு செய்து கொள்வதற்குத் தேவையான நடவக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டிற்காக வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 98,600 தொகையானது கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகிள்ற காணி ஏல விற்பனைகளிலிருந்து அந்தக் காணி விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் 1 சதவீதமான வரி விற்பனையாளரினால் பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும். சகல காணித் துண்டுகளும் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் 1 சதவீத வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 59 துண்டுகளையுடைய மேற்கூறப்பட்ட காணியில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 0.04039 ஹெக்டேயர் அளவில் உள்ளடக்கப்பட்ட இல. 04 மற்றும் 54 ஆம் காணிக் கூறுகளுக்குரிய உரித்துறுதி 2013 மார்ச் மாதம் வரையிலும் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹெரிடேஜ் பார்க்

--------------------------------

ஹபராதுவ ஹறுமல்கொடயில் அமைந்துள்ள 2.0108 ஹெக்டேயர் அளவான காணி 67 துண்டுகளாகக் கூறிடப்பட்டு அதில் 59 கூறுகளில் வசிப்பதற்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கு கூறிடல் திட்டம் 2012 மார்ச் 27 ஆந் திகதி சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறியினும் இந்தக் காணியில் சபைக்கு வழங்கப்பட்ட 66.72 பேர்சஸ் அளவான 06 நிலக் கூறுகளுக்குரிய உரித்துறுதி கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஈ/எப்/எஸ்/4(xiii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்